Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, MAY 07, 2024

செவ்வாய்க்கிழமை மே 07, 2024 | ஒளி: 09 கதிர் 246 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

# பல்கலைக்கழக கல்வி உரிமைக்கு "சவால் விடுப்பு"



## உயர்கல்விக்கான முன்மொழிவுகளை அரசாங்கம் கொண்டு வந்தாலும், அவை நேர்மையான முன்மொழிவுகள் அல்ல

இலவசக் கல்வி என்பது நாட்டில் உள்ள அனைவரும் அனுபவிக்கும் ஒன்று. தொடர்ந்து 85 வருட காலமாக இந்த உரிமையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. அத்துடன், கஷ்டப் பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு வரும் மாணவர்களின் வாழ்க்கையை வெற்றியடையச் செய்வதற்கு பல்கலைக்கழகத்தில் பெற்ற கல்வி பெரும் உதவியாக அமைந்திருந்தது. இந்த உரிமைக்கு இப்போது சவால் விடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (06) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், கல்வித்துறையில் கடுமையான மாற்றங்களை மேற்கொள்ளும் முன்மொழிவுகளை அரசாங்கம் முன்வைத்துள்ளது. இந்த முன்மொழிவுகளின் சாராம்சம் தான் உயர்கல்வித் துறையிலிருந்து அரசு விலகுவதாகும். உயர்கல்விக்கான பொறுப்பை நேரடியாக ஏற்றுக் கொள்ள தற்போதைய அரசாங்கம் தயாராக இல்லை. இளைஞர்களின் விரக்திப் போக்கு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

தொடர்ச்சி P2

# சட்டத்தரணியிடம் விசாரணை



கட்டுநாயக்க விமான நிலையத்தில் மே முதலாம் திகதி தேவையற்ற விதத்தில் நடந்து கொண்ட இளைஞனை விமான நிலைய பொலிஸூக்கு திங்கட்கிழமை (06) காலை வருமாறு அழைக்கப்பட்டிருந்தார். அங்கு சென்றிருந்த சட்டத்தரணியான சந்தருவன் குமாரசிங்க என்ற இளைஞனிடம் ஒன்றரை மணிநேரம் விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

சட்டத்தரணியான சந்தருவன் குமாரசிங்க என்ற இளைஞன், விமான நிலைய பொலிஸூக்கு வந்தபோது, வேறு சில சட்டத்தரணிகளும் அங்கு வருகை தந்திருந்தனர்.

இதேவேளை, விமான நிலையத்தில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையைப் பதிவு செய்த குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மூவரிடமும் வாக்குமூலங்களை பெற்றுக்கொண்டனர்.

# கிராம சேவையாளர்கள் பணிபகிஷ்கரிப்பு

க.அகரன்



நாடளாவிய ரீதியில் கிராம சேவையாளர்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இரண்டு நாள் சுகயீன விடுமுறை வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் கிராம சேவையாளர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாகப் பொதுமக்கள் தங்கள் சேவையினை பெற்றுக்கொள்வதில் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகினர்.

தொடர்ச்சி P2



## இஸ்ரேலின் எச்சரிக்கையை தொடர்ந்து ரஃபாவிலிருந்து மக்கள் வெளியேறுகின்றனர்


ரஃபாவிலிருந்து பொதுமக்கள் உடனடியாக வெளியேறவேண்டும் என இஸ்ரேல் உத்தரவு பிறப்பித்துள்ளதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் அங்கிருந்து வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்.

ரஃபாவில் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கைகளை எதிர்காலத்தில் தீவிரப்படுத்தலாம் என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் அறிவித்த மறுநாள் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உங்களின் பாதுகாப்பிற்காக சோதனை சாவடிகளிற்கு அருகில் உள்ள மனிதாபிமான பகுதிக்கு உடனடியாக செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என இஸ்ரேலிய இராணுவத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அல்ரபாவின் அல்சவ்கா மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை வெளியேறுமாறு இஸ்ரேலிய இராணுவம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஒக்டோபர் 7ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெயர்ந்த மில்லியன் கணக்கான மக்கள் எகிப்து எல்லையில் உள்ள ரஃபாவில் தஞ்சமடைந்துள்ளனர்.



# மரதன் ஓடிய சிறுவன் மரணம்

பொல்பித்திகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவன் மரதன் ஓட்டப்போட்டியில் பங்கேற்ற நிலையில், உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சிறுமிக்கு ஊசி ஏற்றிய சம்பவம் போலியானது

# பொய் செய்தியை பரப்பிய ஆசிரியர் எச்சரித்து விடுதலை



கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் பாடசாலை சிறுமி ஒருவருக்கு இனம் தெரியாத நபர் ஒருவர் ஊசி ஏற்றியதால் சிறுமி மயக்கமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது.

அந்த பொய் செய்தியை திரிபுபடுத்தி சமூக ஊடகங்களில் குரல் பதிவிட்ட ஆசிரியரை திங்கட்கிழமை (06) வரவழைத்து வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டு எச்சரித்து விடுவித்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் ஜி.எம்.பி.ஆர்.பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# மின் கட்டணத்தை குறைக்க பரிந்துரை



மின் கட்டணத்தை மேலும் 20 சதவீதம் குறைக்க துறைசார் மேற்பார்வைக்கான பாராளுமன்றக் குழு பரிந்துரைத்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் மின்சார சபை ரூ.8,200 கோடி இலாபம் ஈட்டியதால், பொருளாதார நெருக்கடியின் பாதிப்பைத் தணிக்கும் வகையிலேயே இவ்வாறு பரிந்துரைத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த குழுவின் தலைவர் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட, "மின்சார சபைக்கு கிடைக்கும் வரம்பற்ற இலாபத்தை கருத்தில் கொண்டு, மின்கட்டணத்தை மேலும் குறைக்க பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் மின்சார சபை என்பன உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2

# "அதிகளவில் டொலர் இழப்பு ஏற்படுகிறது"



எமது நாட்டில் நடைமுறையில் இருந்து வந்த விசா வழங்கும் திட்டத்தை மாற்றியமைத்ததன் மூலம், டொலர்களை அறவிட்டு, அந்த வருமானம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. இதனால், எமது நாட்டுக்குக் கிடைக்கும் அதிக அளவிலான டொலர்களில் இழப்பு ஏற்படுகிறது. இவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துவதன் அடிப்படையும், நோக்கமும் என்னவென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2

# ஆசீர்வாதம் பெற சென்ற சா/த மாணவன் மரணம்

நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை (06) ஆரம்பமான 2023/2024 கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை சுமுகமான முறையில் இடம்பெற்றது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், அந்த பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள், தங்களுடைய மத வழிபாட்டு இடங்களுக்குச் சென்று ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ச்சி P2

## ஆளுநர், அதிகாரிகளை அடைத்த

# 22 வேலையற்ற பட்டதாரிகள் கைது



வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் உள்ளிட்ட மாகாண சபை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை மாகாண சபை கட்டிட வளாகத்திற்குள் அடைத்து, நுழைவு மற்றும் வெளியேறும் கதவுகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட 22 வேலையற்ற பட்டதாரிகள் திங்கட்கிழமை (06) கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அகில இலங்கை ஐக்கிய வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் அழைப்பாளர் தம்மிக்க முனசிங்க உட்பட 11 ஆண்களும் 11 பெண்களும் அடங்குவர்.

பொலன்னறுவை வெலிகந்த போன்ற தொலைதூர பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் சிறு குழந்தைகளுடன் இந்த இடத்திற்கு வந்துள்ளனர், மேலும், வடமத்திய மாகாணத்தில் உள்ள வெற்றிடங்களை விட மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் குறைவாக இருப்பதால் அவர்களுக்கு ஏன் வேலை வழங்கப்படவில்லை என இக்குழுவினர் கேள்வி எழுப்பினர்.

தொடர்ச்சி P2

# "திருமலை வைத்தியசாலை குறைபாடுகளை தீர்க்கவும்"



ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை பல குறைபாடுகளுடன் இயங்கி வருவதாகவும் இதனை சுகாதார அமைச்சு உடனடியாக சீர் செய்து கொடுக்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு திங்கட்கிழமை (06)கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இவ் விஜயத்தின் போது கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் க.குகனும் உடனிருந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பல்கலைக்கழக கல்வி உரிமைக்கு "சவால் விடுப்பு"



அரசாங்கம் கொண்டு வந்துள்ள பிரேரணைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை இல்லாதொழிப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல முக்கிய செயற்பாடுகளைக் கொண்டுள்ளது. பல்கலைக்கழக கட்டமைப்பின் கல்வித் தரத்தைப் பாதுகாப்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். உயர்கல்விக்கான முன்மொழிவுகளை அரசாங்கம் கொண்டு வந்தாலும், அவை நேர்மையான முன்மொழிவுகள் அல்ல.

அத்துடன், வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கி, அவர்களை நாட்டிற்கு அழைத்து வந்து, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறச் செய்து, அவர்களுக்கு இலங்கையில் வேலை வாய்ப்பு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது. இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர். அவர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த முயற்சியை முறியடிக்கப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும். உயர்கல்வியை இல்லாதொழிக்க இந்த மக்கள் ஆணை இல்லாத அரசாங்கத்திற்கு இடமளிக்கக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

## கிராம சேவையாளர்கள்...



குறித்த பணிபகிஸ்கரிப்பானது சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மரதன் ஓடிய சிறுவன் மரணம்

கடந்த 4ஆம் திகதி காலை, நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பங்கேற்றிருந்த சிறுவன், வீட்டிற்குத் திரும்பியதன் பின்னர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு தரையில் அமர்ந்துள்ளார்.

குறித்த சிறுவனை வைத்திய பரிசோதனைக்காக குருணாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும், உயிரிழந்து விட்டார். மாரடைப்பு காரணமாகச் சிறுவன் உயிரிழந்ததாக வைத்திய பரிசோதனையில் தெரியவந்துள்ளது என பொல்பித்திகம பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## ஹங்வெல்லவில் நடந்தது என்ன?

ஹங்வெல்ல-ஜல்தாரா அரச ஊழியர் வீடமைப்புத் தொகுதியில் வசிக்கும் தனது மனைவியைக் கொலை செய்வதற்கு ஞாயிற்றுக்கிழமை (05) மாலை கைக்குண்டுடன் வந்த சட்டப்பூர்வ கணவர் என கூறிக்கொண்ட நபர் ஒருவர் தனது இரண்டு சிறு பிள்ளைகளை பணயக்கைதிகளாக வைத்திருந்த நிலையில், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் மணிநேர நடவடிக்கையின் பின்னர் இரண்டு பிள்ளைகளும் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும், கைக்குண்டுடன் இருந்த சந்தேக நபரும் பெரும் முயற்சியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு குழந்தைகளும் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட போது, சந்தேக நபர் இரண்டு குழந்தைகளுக்கும் சில தடுப்பூசிகளைச் செலுத்தியதால், இரண்டு குழந்தைகளையும் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அத்தியட்சகர் திமுத்து சமரநாயக்க, வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவின் பணிப்பாளர், குழந்தைகளைப் பணயக் கைதிகளாகப் பிடித்து கைக்குண்டில் இருந்த பூட்டை அகற்றிய நபருடன் கலந்துரையாடி கைக்குண்டை மீண்டும் பூட்டுவதற்குக் கடுமையாக உழைத்துள்ளார்.

பின்னர், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பிரதித் தளபதி (செயல்பாடுகள்) குணரத்ன மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் திமுத்து சமரநாயக்க ஆகியோர் சந்தேக நபருடன் ஒன்பது மணிநேரம் கலந்துரையாடி, சந்தேகநபரை இரண்டு பிள்ளைகளுக்கும் தீங்கு செய்யாமல் வீட்டை விட்டு வெளியே வருமாறு கடுமையாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆனால், சந்தேகநபர் அந்த கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல் தொடர்ந்து குழந்தைகளைப் பிணைக் கைதிகளாக வைத்திருந்ததால், பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் திடீரென நடவடிக்கை மேற்கொண்டு சந்தேகநபர் இருந்த அறையின் கதவுகளை உடைத்து சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் வைத்திருந்த கைக்குண்டை அழிக்க வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பொய் செய்தியை பரப்பிய ஆசிரியர் எச்சரித்து விடுதலை

நகரிலுள்ள உள்ள பாடசாலையில் தரம் 5ம் ஆண்டில் கல்விகற்றுவரும் 10 வயது சிறுமி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை(03) பாடசாலை முடிந்து பிறபகல் 2.30 மணியளவில் பாடசாலை வளாகத்தில் பெற்றோர் வருவதற்காகக் காத்திருந்தார்.

அங்குக் கறுப்பு நிறத்திலான நீள் காற்சட்டையும், சேர்ட்டும் அணிந்திருந்த இளைஞன், கறுத்த நிறத்திலான மாஸ் அணிந்திருந்தார். அச்சிறுமியின் அருகில் வந்த அவ்விளைஞன், சிறுமியின் பெயரைக் கேட்டு பாடசாலையில் அனைவருக்கும் ஊசி போடுவதாகவும் உங்களுக்கு ஊசி போடவில்லை என தெரிவித்து சிறுமிக்கு ஊசி ஒன்றை ஏற்றிவிட்டு அவன் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளான். அதனால் சிறுமி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே, ஏனைய பிள்ளைகள் கவனம் என ஆசிரியர் ஒருவர் குரல் பதிவிட்டு சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டதையடுத்து இது தொடர்பாக மட்டு. தலைமையக சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சப் இன்பெக்ஸ்டர் விவேகானந்தன் தலைமையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சம்பவ தினமான கடந்த வியாழக்கிழமை (2) சிறுமியைப் பாடசாலையில் இருந்து பிற்பகல் 2.30 மணிக்கு வீட்டிற்குத் தந்தையார் மோட்டர் சைக்கிளில் அழைத்துச் சென்றதாகவும் அதன் பின்னர் தனது தாயாரிடம் பாடசாலையில் இன்று ஊசி போட்டதாகவும் அதனால் வாந்தி எடுத்ததாகவும் மயக்கமாக இருப்பதாகவும் தெரிவித்ததுள்ளார்.

எனினும், வகுப்பாசிரியர், அதிபர் மற்றும் மாணவர்களின் பெற்றோரிடம் அந்த தாயார் விசாரித்தபோது அப்படி ஊசி எதுவும் போடவில்லை என அறிந்து கொண்டார்.

இதன் பின்னர் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை சிறுமிக்குக் காய்ச்சல் காரணமாகப் பாடசாலைக்குச் செல்லாது இருந்துள்ளார். தனக்கு ஊசி போட்டதாக மகள் தன்னிடம் தெரிவித்ததை, கணவனிடம் மனைவி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மாலை 3 மணிக்கு மட்டு. போதனா வைத்தியசாலை அவசர பிரிவில் சிறுமியை அனுமதித்த தந்தை, ஊசி போட்டதாகச் சிறுமி தெரிவித்ததை வைத்தியரிடம் தெரிவித்து, இரத்த சோதனை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதன்பின்னர், இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டதுடன் சிறுமியை வாட்டுக்கு மாற்றி சிகிச்சையளிக்கப்படுகின்றத.

அதேவேளை, பாடசாலையில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி கமெராவை சோதனை செய்த பொலிஸார், இவ்வாறான சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை என தெரிய வந்துள்ளது. அத்துடன் சிறுமி பொய் சொல்லியுள்ளார் எனவும் தெரியவந்தது.

எனினும், சிறுமி பொய் சொல்லியுள்ளார் என்பதை அறியாத தனியார் கல்வி நிலைய ஆசிரியர், குரல் பதிவிட்டு சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சமூக ஊடகங்களில் குரல் பதிவிட்ட ஆசிரியரை, பொலிஸார் வரவழைத்து வாக்கு மூலம் பெற்றுக்கொண்டு அவரை எச்சரித்து விடுவித்துள்ளனர். எனினும், சிறுமிக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், இவ்வாறு உறுதிப்படுத்தப்படாமல் சமூக ஊடகங்களில் பதிவிட்டு பொதுமக்களைப் பீதியடைச் செய்பவர்களுக்கு எதிராகக் கைது செய்து கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

## "திருமலை வைத்தியசாலை குறைபாடுகளை தீர்க்கவும்"

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், தொடர்ந்தும் தெரிவிக்கையில், கடந்த இரண்டரை மாதங்களுக்கு முன்னர் எமது கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் மக்களின் வேண்டுகோளிற்கு இணங்க விஜயமொன்றை மேற்கொண்டு வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சிற்குத் தெரியப்படுத்தியிருந்தார்

அதனை முன்னிட்டு அது தொடர்பில் ஆராய இன்று விஜயம் ஒன்றை நாம் மேற்கொண்டு வைத்தியசாலை பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள் உட்பட ஊழியர்கள் மற்றும் நோயாளிகளுடன் கலந்துரையாடியுள்ளோம்.

சுகாதார ஊழியர்கள் குறைபாடுகள் காரணமாக வைத்திய நிபுணர்கள் தங்கள் கடமைகளைச் சரியாக மேற்கொள்ள முடியாமையும் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர் சுமார் 100 ஊழியர்கள் பற்றாக்குறை நிலவுவதுடன், தாதியர்களுக்கான பற்றாக்குறையும் கணிசமான அளவு நிலவுகிறது.

இந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும். இது போன்று பௌதீக வளங்கள் பற்றாக்குறையும் நிலவுகிறது அவசர விபத்து சிகிச்சைப் பிரிவு இங்கு இல்லை மற்றும் இருதய நோய்க்கான கட்டிடமும் இங்கு இன்மையால் நோயாளிகள் வெளிவட்டங்களுக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டியுள்ளது. சி.டி. இயந்திரம் செயலிழந்தும் எம்.ஆர்.ஐ போன்ற இயந்திர பற்றாக்குறையும் நீடிக்கிறது. வைத்தியசாலைக்கான விடுதிகளில் சீராக மின்விசிறி கூட இயங்குவதில்லை எனவும் குடி நீர் கூட பல பற்றாக்குறைபாடுகளுடன் இயங்கி வருகிறது இந்த பிரச்சினைகள் சீர் செய்யப்பட்டுத் திறம்படச் சேவைகளை வழங்க வேண்டும் எதிர் வரும் வாரமளவில் இது தொடர்பில் பாராளுமன்றத்திலும் பேசி பிரச்சினைகளைத் தீர்க்க முழு முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்றார்.

## மின் கட்டணத்தை குறைக்க பரிந்துரை



இதன் மூலம் மக்களின் பொருளாதார சிரமங்களை ஓரளவு குறைக்க முடியும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டின் முதல் அரையாண்டில் மின் உற்பத்தியில் நீர் மின்சாரத்தின் பங்களிப்பு அதிகரித்ததே வாரியத்தின் நிதிச் செயல்பாடு அதிகரிப்பதற்கு முக்கியக் காரணம் என்றும் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வருடம் மின்சார சபையின் திரட்சியான இலாபம் 6,000 கோடி ரூபாயாகும் எனவும், 2024 ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் பெறப்பட்ட 5,100 கோடி ரூபாவையும் சேர்த்து 2024 மார்ச் 31ஆம் திகதி வரை 8,200 கோடி ரூபாய் இலாபமாக ஈட்டப்பட்டுள்ளதாக அக்குழு தெரிவிக்கின்றது.

## "அதிகளவில் டொலர் இழப்பு ஏற்படுகிறது"



தரவுகளை மையப்படுத்திய அறிவியல் ரீதியிலான பகுப்பாய்வுகளின் அடிப்படையிலேயே இத்தகைய முடிவுகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். நாட்டிற்கு நன்மை பயப்பதாக இது அமைய வேண்டும். இதன் சாதக, பாதகங்கள் குறித்தும், நன்மை தீமைகள் குறித்தும் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். இது பிணை முறி மோசடியை விடப் பாரதூரமான நிதி மோசடி என பல்வேறு வதந்திகள் பரவி வரும் நிலையில், இது தொடர்பில் உண்மை நிலையை நாடு அறிய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 177ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் பியகம, பொல்லேகல மகா வித்தியாலத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (06) இடம்பெற்றது.

இந்நிகழ்வில், ஜே.ஆர்.ஜயவர்தனவின் பேரன் பிரதீப் ஜயவர்தன கலந்து கொண்டிருந்தார்.

நாட்டை ஆள்பவன் ஒரு தற்காலிக பொறுப்பாளனே. எனவே முட்டாள்தனமான கொள்கைகளில் இருந்து விலகி யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். யாரேனும் நல்லது செய்தால் நல்லது என்று கூற வேண்டும். எதிர்க்கட்சியோ அல்லது வேறு யாரேனும் நாட்டுக்கு நல்லது செய்தால் அதைப் பாராட்ட வேண்டும். தான் பேசும் விவாதங்களுக்கும் போலவே செயலிலான விவாதங்களுக்கும் தயார். நாட்டுக்குத் தேவையான பணிகள், தீர்வுகள், பதில்கள் மற்றும் வேலைத்திட்டங்களை நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்றார். ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழு, தலைவர்கள் எந்த நேரத்திலும் விவாதத்திற்குத் தயாராக உள்ளனர். அதுமட்டுமல்லாமல் மூன்றாவது விவாதமாகப் பேசுவதோடு மாத்திரமல்லாது, செயல் ரீதியிலான விவாதத்திற்கும் தாம் தயார் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்து நிலைமையிலிருந்து விடுவித்து, மீண்டும் வங்குரோத்து நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான மூலோபாயங்கள் குறித்து யாரும் பேசுவதில்லை. தோல்வி கண்ட கம்யூனிஸ, மார்க்சிஸ சித்தாந்தங்களால் எமது நாட்டை கட்டியெழுப்ப முடியாது. தீவிர சோசலிஸவாதிகளின் பிள்ளைகள் கூட பணம் செலுத்திப் படிக்கும் தனியார் பாடசாலைகளுக்கே செல்கின்றனர் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் எந்த சூழ்நிலையிலும் நாம் அரச பாடசாலைகளைத் தனியார் மயமாக்க மாட்டோம் என்றார்.

## ஆசீர்வாதம் பெற சென்ற சா/த மாணவன் மரணம்

பலாங்கொட- மரதென்ன, தெதனகல தமிழ் பாடசாலையில், கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவன், ஆலயம் ஒன்றிற்குச் சென்ற போது, மயங்கி விழுந்து திங்கட்கிழமை (06) அதிகாலை படுக்கையிலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொட மரதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த ஹரநாத் ரஞ்சித் குமார என்ற 17 வயதுடைய சிறுவனே இவ்வாறு மரணமடைந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாங்கொட பின்னவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 22 வேலையற்ற பட்டதாரிகள்...

திங்கட்கிழமை (06) காலை 10 மணியளவில் மாகாண சபையின் பிரதான வாயில் ஊடாக மாகாண சபை வளாகத்தினுள் நுழைந்த வேலையற்ற பட்டதாரிகள் குழு வடமத்திய மாகாண சபையின் அனைத்து நுழைவாயில்கள் மற்றும் வெளியேறுகளை அடைத்து தரையில்



அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல மணி நேரத்திற்குப் பின்னர் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிட்டுள்ளது.

## இராதாகிருஸ்ணனின் அழைப்பின்பேரில்

# இலங்கை வருகிறார் ரவிசங்கர் குருஜி





**டி.ஷங்கீதன்**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நுவரெலியா சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 18ஆம் திகதி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி இலங்கைக்கு வருகை தருகின்றார்.

வாழும் கலை பயிற்சியின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி, தனது வருகையை உறுதி செய்துள்ளதாக சீதைம்மன் ஆலய அறங்காவலர் சபை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

நானும் எங்களுடைய ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களும் கடந்த மாதம் இந்தியாவின் பெங்களூர் நகரிற்கு விஜயம் செய்து வாழும் கலை பயிற்சியின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியை அவருடைய ஆசிரமத்தில் சந்தித்து எங்களுடைய ஆலய கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பிதழ் வழங்கினோம்.

குருஜி அழைப்பிதழைப் பெற்றுக்கொண்டு தன்னுடைய வருகையை மிகவிரைவில் உறுதிப்படுத்துவதாக எங்களிடம் தெரிவித்திருந்தார். அதற்கு அமைய அவர் தற்பொழுது தான் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதை உறுதி செய்துள்ளார்.

எனவே, நாம் அவரை வரவேற்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றோம்.

குருஜி 18 ஆம் திகதி கொழும்பை வந்தடைந்து அங்கிருந்து அன்று மாலை நுவரெலியாவை வந்தடைந்து ஆலயத்தின் எண்ணெய்க் காப்பு நிகழ்விலும் கலந்து கொள்கின்றார்.

அதனைத் தொடர்ந்து அடுத்த நாள் நடப்பெறுகின்ற மஹா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்கின்றார். கும்பாபிஷேக நிகழ்வில் கோய்ம்புத்தூர் நகரிலிருந்து வருகை தருகின்ற சுவாமி ஜகதாத்மானந்தா சரஸ்வதியும் கலந்து கொள்கின்றார்.

## "பெண்களுக்கான பொருளாதார

# சுதந்திரம் வழங்கப்படும்"

வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் மது போதைக்கு எதிரான இயக்கம் நடாத்திய விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து சிறப்பித்துள்ளார்.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனையால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும், சவால்களும் என்ற தொனிப்பொருளில் இந்த



விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது உரையாற்றிய வடக்கு ஆளுநர், போதைப்பொருள் பாவனை ஒரு சவாலான விடயமாகக் காணப்படுகின்றது.

அத்துடன், போதைப்பொருள் பாவனையால் பெண்கள் அதிகளவில் சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்நிலையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளுக்கு எதிரான பிரசாரங்களைச் செய்வதைவிடுத்து, இளைஞர், யுவதிகளை மாற்றுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் திறன்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இதற்காகத் தனது பணிப்புரைக்கு அமைய வடக்கு மாகாண விளையாட்டுத்துறை மற்றும் கலாசார திணைக்களம் ஆகியன இணைந்து கிராமிய மட்டத்தில் புதிய செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

மேலும், பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் வழங்கப்படும் போது சிறந்த மாற்றங்களை எதிர்பார்க்க முடியும். அதற்கமைய நிலையான பொருளாதாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான புதிய திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் போதைப்பொருளானது குடும்பங்களின் அடிப்படையை சிதைத்துக் கொண்டிருக்கும் நிலையில், அதற்கு எதிராகச் செயற்பட அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

# சேமிப்பு பிரிவுகள் திறந்து வைப்பு

**பி.கேதீஸ்**

இலங்கை வங்கி, தலவாக்கலை கிளையினூடாக தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் தலவாக்கலை தேசிய பாடசாலைகளில் இலங்கை வங்கி சேமிப்பு பிரிவுகள் திறக்கப்பட்டன.

இலங்கை வங்கியின் நுவரெலியா பிரதேச பிராந்திய முகாமையாளர் பி.விஸ்வநாதன் மற்றும் இலங்கை வங்கி தலவாக்கலை கிளை முகாமையாளர் எம்.இராமன் ஆகியோரால் இந்த சேமிப்பு பிரிவுகள் திறந்து




வைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் சேமிப்பு திறனை ஊக்குவிக்கும் முகமாக இந்த சேமிப்பு பிரிவுகள் பாடசாலைகளிலேயே திறந்து வைக்கப் பட்டுள்ளதுடன் இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

# பேராசிரியர் வித்தியானந்தன் நூற்றாண்டு விழா



பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அறக்கட்டளை மற்றும் யாழ். தேசிய கல்வியற் கல்லூரி என்பன இணைந்து யாழ். தேசிய கல்வியற் கல்லூரி சரஸ்வதி அரங்கில் நூற்றாண்டு விழாவை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கம் 6 மணி வரையிலும், மறுநாள் 12ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், 'பேராசிரியர் வித்தியானந்தனின் மனப்பதிவுகள் 'கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்படும்.

யாழ். தேசிய கல்வியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் 'விழுமியக் கல்வியின் தேவையும் போக்கும்' எனும் தலைப்பில் பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன், பேராசிரியர் வித்தியானந்தனின் அளிக்கை பாணியில், பேராசிரியர் சி.மௌனகுருவின் நெறியாள்கையில் 'இராவணேசன் கூத்து அளிக்கை மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் து.அயூரனின் நெறியாள்கையில் காத்தவராஜன் கூத்து அளிக்கையும் இடம்பெறவுள்ளன.

# விண்ணப்பங்கள் கோரல்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (காஆஅ) உறுப்பினர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகைமைகளை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதற்காக www parliament. lk எனும் பாராளுமன்ற இணையத்தளத்தில் (காஆஅ) விற்கான உறுப்பினர்கள் நியமனம் என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2024 மே 27ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும்.

விண்ணப்பங்கள், அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக 'காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான உறுப்பினர்கள் நியமனம்' என குறிப்பிடப்படல் வேண்டும்.

# விபத்தில் யுவதி பலி; மூவருக்கு காயம்



பன்விலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹுலுகங்கை அரத்தன பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (05) மாலை இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் 21 வயதான யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெல்தெனிய பிரதேசத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் வேலையை முடித்து விட்டு முச்சக்கரவண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது, முச்சக்கரவண்டி வீதியை விட்டு சுமார் 35 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்களானது.

இதில், பன்விலை தவலந்தன்ன ஆகலை தோட்டத்தைச் சேர்ந்த செல்வராஜ் சபியா (21) என்ற யுவதி உயிரிழந்துள்ளதுடன்,

மேலும் முச்சக்கரவண்டியில் பயணித்த இரு பெண்கள் காயமடைந்த நிலையில், மடுல்கலை வைத்தியசாலைக்கும், சாரதி காயமடைந்த நிலையில், தெல்தெனிய வைத்தியசாலைக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த யுவதியின் சடலம் பிரேதப் பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தெல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# வீதி விபத்தில் ஐவர் படுகாயம்

**கனகனராசா சரவணன்**

கல்முனையில் இருந்து மாரகம நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று ஞாயிற்றுக்கிழமை (05) நள்ளிரவு 1.45 மணியவில் விபத்துக்குள்ளானதில் 5 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவை டிப்போவுக்கு சொந்தமான குறித்த பஸ் கல்முனையில் இருந்து மட்டக்களப்பு ஊடாக மகரகம நோக்கிப் பயணித்த போது செங்கல சிக்கினல் சந்தியில் வேககட்ப்பாட்டை மீறி வீதியை விட்டுவிலகி மின்கம்பத்துடன் மோதி மின்பிறப்பாக்கியை உடைத்துக் கொண்டு கடை தொகுதிக்குள் உட்புகுந்தது விபத்துக்குள்ளானது.

இதில் சாரதி நடத்துநர்




உட்பட 5 பேர் படுகாயடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்தில் மின்பிறப்பாக்கி மற்றும் கடை தொகுதி பலத்த சேதமடைந்ததுடன் அந்த பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது

மேலும் இது தொடர்பான விசாரணைகளை ஏறாவூர் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# மகனை தரையில் அடித்த தந்தை


போதைப்பொருள் வாங்க மனைவியிடம் பணம் கேட்டு கிடைக்காததால் ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஏழு வயது மகனைத் தரையில் அடித்து பலத்த காயம் ஏற்படுத்திய தந்தையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சில நாட்களுக்கு முன்பு, தனது ஏழு வயது மகனை தனது கணவர் தரையில் அடித்ததாகப் பெண் ஒருவர் கிராண்ட்பாஸ் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். அதில் , தனது கணவர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும், போதைப்பொருள் வாங்கப் பணம் கேட்டு தன்னையும் பிள்ளையையும் தொடர்ந்து துன்புறுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவ தினத்தன்று தனது கணவர் பணம் கேட்டு தன்னை கொடூரமாகத் தாக்கியதாகவும், அருகில் வந்த தனது 7 வயது மகனைத் தூக்கி தரையில் கொடூரமாகத் தாக்கியதாகவும் அந்த பெண் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார், சந்தேக நபரைக் கைது செய்துள்ளதுடன், தரையில் விழுந்து படுகாயமடைந்த சிறுவன் கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான்



உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சந்தேக நபர் போதைப்பொருள் பாவனைக்காக பல சந்தர்ப்பங்களில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## உருக்குலைந்த நிலையில்

# ஆணின் சடலம் மீட்பு

**துவாரகஷான்**

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டொரிங்டன் மோர்சன் வனப்பகுதியில் இருந்து உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் ஞாயிற்றுக்கிழமை (05) மீட்கப்பட்டுள்ளது.

குறித்த தோட்டத்தில் உள்ள சிலர் விறகு தேடுவதற்காக வனப்பகுதிக்குச் சென்றுள்ளபோது, அப்பகுதியில் அதிக துர்நாற்றம் வீசியதால் அப்பகுதியைச் சோதனை செய்தபோது, ஒருவர் இறந்த நிலையில், சடலமாகக் கிடப்பதைக் கண்டு அது தொடர்பில் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

அதற்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் அதிகாரிகளால் சடலத்தை மீட்டு, குறித்த சடலம்



பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சடலம் உருக்குலைந்து காணப்பட்டதால் இறந்தவர் யாரென அடையாளம் காண முடியவில்லை எனவும் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கிராம உத்தியோகத்தர்கள் போராட்டம்


**தீஷான் அஹ்மட்**

சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும், சேவை பெறுமான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கிரான் பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறை போராட்டமொன்றை திங்கட்கிழமை(06) முன்னெடுத்துள்ளனர்.

குறித்த போராட்டம் நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை (06) மற்றும் செவ்வாய்க்கிழமை (07) முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.







# சோற்றை பிடுங்கித் தங்கள் பசியைத் தீர்க்க முயலக்கூடாது

பொருளாதார வளர்ச்சி பற்றி என்னதான் பேசினாலும், இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்கிறார்கள் என்பது மறைக்க முடியாத உண்மை. மிகவும் அவலமான வாழ்க்கை வாழ்ந்து வரும் அந்த மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கும் நோக்கில் 10 கிலோ கிராம் அரிசி வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்காக இந்த தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 10 கிலோ கிராம் அரிசி வழங்கும் திட்டம் மிகவும் பாராட்டப்பட வேண்டியது. சோறு கொடுப்பது மட்டுமல்ல, மக்களிடம் அரிசி வாங்கும் திறனை உருவாக்குவதுதான்' என்ற அறிஞர்களின் பேச்சு பொருத்தமற்றது. மக்களுக்கு எந்த வகையிலும் நிவாரணம் வழங்குவது பாராட்டப்பட வேண்டும். இது காலத்தின் தேவை.

இவ்வாறான தேசிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது, பல்வேறு அவதூறுகளைச் செய்து சிறுமைப்படுத்த முயல்பவர்களும் உள்ளனர். மேலும், ஏழையின் கிண்ணத்தில் வைனை ஊற்றுவது போல, ஏழைகளின் மானியத்தில் சொந்தப் பணத்தைக் கொழுக்க வைக்கும் சில அயோக்கியர்கள் இருக்கிறார்கள்.

இந்த அதிகார வரம்பில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர் ஒருவர் தரமற்ற அரிசியை மக்களுக்கு விநியோகம் செய்துள்ளார். அரிசி விநியோகஸ்தர்களுக்கு அரசாங்கம் ஒரு கிலோ கிராம் 188 ரூபாய் 60 சதத்துக்கு அரிசியை வழங்கிய நிலையிலும் இந்த மில் உரிமையாளர் தரமற்ற அரிசியை மக்களுக்கு விநியோகித்துள்ளார்.

மக்களின் இயலாமையைப் பயன்படுத்தி தங்கள் பேராசையைக் கண்டுபிடிக்கும் இத்தகைய கடத்தல்காரர்களுக்கு அரச தண்டனை வழங்கப்பட வேண்டும். இவ்வாறான சம்பவங்கள் செவனகல பிரதேச அதிகார எல்லையில் மட்டுமன்றி நாட்டின் பல மாகாணங்களில் இருந்தும் பதிவாகியுள்ளன.

"உயிரினங்கள் அனைத்தும் உணவினால் வாழ்கின்றன" என்று புத்தர் கூறியிருக்கின்றார். வாழ்வதற்கு உணவு அவசியம். ஆனால், செல்வத்துடன் வளர்ந்த சிலர் உணவுக்காக வாழாமல் உணவுக்காக வாழ்கின்றனர். மற்றவரின் சோற்றைக் கூட பிடுங்கித் தங்கள் பசியைத் தீர்க்க ஆசைப்படுகிறார்கள்.

ஒரு வணிகத்தின் நோக்கம் இலாபம் ஈட்டுவதாகும். அப்படித்தான் இருக்க வேண்டும். இலாபம் இல்லை என்றால் எந்த தொழிலும் நடத்த முடியாது. ஆனால் இலாபம் நியாயமானதாக இருக்க வேண்டும். நியாயப்படுத்தப்பட வேண்டும். நேர்மையாக இருக்க வேண்டும். ஏழை மக்களுக்கு வழங்கப்படும் அரிசி மானியத்தில் தரமற்ற அரிசியை விநியோகிப்பது நியாயமில்லை. இது மனித குலத்திற்கே அவமானம். இத்தகைய மனிதாபிமானமற்றவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

அதுமட்டுமன்றி, பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் சகல மக்களுக்கும் மானிய அரிசி கிடைக்கும் வகையில் வழிசமைக்க வேண்டும். இல்லையேல், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் போசாக்கு நிலையை மேம்படுத்தும் திட்டம் பிரயோசனம் அற்றதாகிவிடும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களைப் பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராள மனம் படைத்தோர் தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை.

இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என ஏராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும் போது. அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களைத் துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை. பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீயோர்களை களைவதில் தங்கியுள்ளது.

– பருத்தியூர் பால வைரவநாதன்

## கடிதங்கள்

### விவசாயிகள் கோரிக்கை

விகாராதிபதியினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது விவசாயக் காணிகளைப் பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குச்சவெளி  திரியாய் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட ஆத்திக்காட்டுவெளி பகுதியில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் காணிகளில் பௌத்த பிக்கு ஒருவர் விவசாயம் மேற்கொண்டு வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை தமது வாழ்வாதாரத்திற்காக மீட்டுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஆத்திக்காடு பகுதியில் உள்ள 88 ஏக்கர் காணி பானாமுரே திலகவங்ச நாயக்க தேரர் என்ற பௌத்த பிக்கு ஒருவரின் பெயரில் தற்காலிக இடாப்பு பதிவு மேற்கொள்ளப்பட்டுக் கிட்டத்தட்ட 3 வருடங்களாக சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதற்காக அரசாங்கத்திடம் இருந்து 20 சிங்கள மக்களின் பெயரில் மானியப் பசளை பெற்று வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் 88 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட காணிகள் அப்பகுதியில் உள்ள சப்தநாக பப்பத வன சென்சுன விகாரைக்கரியது என குறிப்பிட்டு ஆக்கிரமிக்கப்பட்டு புத்த பிக்கு ஒருவரின் தலைமையின்கீழ் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

– எஸ்.கீதபொன்கலன்

# பிராந்திய ஆதிக்க நாடுகளின் கழுகுப் பார்வை

மொஹமட் பாதுஷா

அரசியல் ஸ்திரத்தன்மையில் ஏற்படுகின்ற தளம்பல்களும், பொருளாதார மற்றும் இன நெருக்கடிகளும் இலங்கையில் தொடர்கதையாக இருக்கின்ற சூழலில், நாட்டின் வளங்களையும் மக்களின் நலன்களையும் கழுகுக் கண்களில் இருந்து பாதுகாப்பது பெரும் சிக்கலான விடயமாக மாறியிருக்கின்றது.

நிலங்களையும் வளங்களையும் அபகரிக்கும் இலங்கையர்களான தனி நபர்களிடமிருந்தே, நாட்டின் வளங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதிருக்கின்ற காலகட்டத்தில், ஏனைய நாடுகளிடமிருந்தும் ஆதிக்க சக்திகளிடம் இருந்தும் அவற்றைப் பாதுகாப்பது எந்தளவுக்கு சாத்தியம் எனத் தெரியவில்லை.

இந்த நாட்டின் மக்களுக்கு, மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு, ஆட்சியாளர்களுக்கு, அதிகார வர்க்கத்தின் தரகர்களுக்கு, அரச அதிகாரிகளுக்கு நிலத்தின் மீதும், நமது வளத்தின் மீதும் இல்லாத பற்று, சீனா, இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு இருக்கும் என்று நினைக்கத் தேவையில்லை.

ஆரம்பக் காலத்தில் இருந்த காலனித்துவ ஆட்சி நிலைமைகள் பிறகு மாற்றமடைந்தன. ஆனால், இன்றும் அரசியல் செல்வாக்கு, ஆதிக்கம், இராணுவ ஆக்கிரமிப்பு, வளங்களைக் குறிவைத்தல் என்ற போர்வையில் காலனித்துவம் வேறு ஒரு பாணியில் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றது. இதனை நவீன காலனித்துவம் என்கின்றார்கள்.

குறிப்பாக இலங்கைக்குப் பொருளாதார உதவிகள், மனிதாபிமான ஒத்தாசைகள், அரசியல் ஆதரவுகள், இராஜதந்திர அனுசரணைகள் என்ற கோதாக்களில் வெளிநாடுகளால் செய்யப்படுகின்ற பெரும்பாலான முன்னெடுப்புக்களுக்குப் பின்னால், அந்தந்த தரப்புக்களின் சொந்த நலனும், அரசியலும், பிராந்திய ஆதிக்க நோக்கங்களும் உள்ளன எனலாம்.

இலங்கை ஆரம்பக் காலத்திலிருந்தே சர்வதேச ஒத்துழைப்பை வேண்டி நின்றது. பல முக்கியமான செயற்றிட்டங்கள் உலக நாடுகளின் ஒத்துழைப்புடனேயே நிறைவேற்றப்பட்டன. ஆனால், பிராந்தியத்தில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஆதிக்கப் போட்டி ஏற்பட்ட பிறகு, அவ்விரு நாடுகளும் தமது பலத்தை உரசிப் பார்ப்பதற்கான களமாக இலங்கை மாறியிருக்கின்றது எனலாம்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பு தொன்மையானது. ஆபத்தில் உதவுகின்ற அயலவனாக மட்டுமன்றி, பாரம்பரிய கலாசார, வரலாற்றுத் தொடர்புகளையும் இவ்விரு நாடுகளும் பகிர்கின்றன. இலங்கையின் உள்நாட்டு விவகாரங்கள் பலவற்றுடன் இந்தியா ஆரம்பத்திலிருந்தே தொடர்புபட்டுள்ளது. இந்திய அரசியல்வாதிகள் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செல்வாக்குச் செலுத்த விரும்புகின்றனர்.

நாட்டின் யுத்தமும் இனப் பிரச்சினையும் இந்தியா, இலங்கை விவகாரத்தில் மேலும் அக்கறை செலுத்துவதற்கான கதவுகளைத் திறந்து விட்டன. அதேபோல், நிதிசார்ந்த தேவைப்பாடுகளும் அபிவிருத்திக்கான இடைவெளியும் சீனா இந்த நாட்டுக்குள் நுட்பமாகக் காலூன்ற வழிவகுத்துள்ளது எனலாம்.

இதற்கிடையில் அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட வேறு சில நாடுகளும் ஏதோ ஒரு போர்வையில் தமது காரியங்களைச் செய்து கொள்கின்றன. ராஜதந்திரம், புலனாய்வு, அரசியல் நகர்வு, பொருளாதார ஒத்துழைப்பு என்ற பல கருவிகளின் ஊடாக இதுவெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தியாவைத் தமிழ் மக்கள் நம்பியிருந்தாலும், இன்று வரை 'இரண்டு பக்கமும் விளையாடுகின்ற' வேலையையே இந்திய அரசியல்வாதிகள் செய்து வருவதாக அவதானிகள் சொல்வதுண்டு. இதற்காக இனப் பிரச்சினையைப் பிச்சைக்காரனின் புண்ணைப் போல, இன்று வரை பராமரித்து வருவதாகவும் விமர்சனங்கள் உள்ளன.

தமிழர் விவகாரமும் இலங்கை - இந்திய ஒப்பந்தமும் இந்தியாவின் அதிகரித்த செல்வாக்கிற்குச் சாதகமான கள நிலைமைகளை அமைத்துக் கொடுத்தன. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களுக்கு ஆறுதல் பரிசாக 13ஆவது திருத்தம் கொண்டு வரப்படுவதற்கு மேற்படி ஒப்பந்தம் வழிவகுத்தது.

ஆனால், 13ஆவது திருத்தம் இன்று வரை முழுமையாக அமுல்படுத்தப்படவும் இல்லை. முற்றாக நீக்கப்பட்டு அதற்குப் பதிலீடாக இன்னுமொரு ஏற்பாடு மேற்கொள்ளப்படவும் இல்லை. அதேநேரம், இந்திய அமைதி காக்கும் படைகள் தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு செய்த அட்டூழியங்களும் இந்தியாவின் தலையீடு அதிகரித்த பிற்பாடு ஏற்பட்ட சிக்கல்களும் இங்கு நினைவு கொள்ளத்தக்கவை.

இந்தியாவைப் பலமாக எதிர்த்தாடத் தொடங்கிய பிறகு சீனா இலங்கையில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது எனலாம். ராஜபக்ஷக்களின் ஆட்சி சீனர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இன்று பல பொருளாதார கட்டமைப்புக்கள் ஏதோ ஒரு வகையில் சீனாவின் பெயர் தாங்கி நிற்கின்றன.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டமை இந்தியாவுக்கு பெரும் சவாலாக அமைந்தது. அதன் பிறகு கொழும்பு துறைமுக நகர் செயற்றிட்டம் இன்னும் தலையிடியைக் கூட்டிவிட்டது. இந்நிலையில், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் இந்தியா குறிவைத்து, சர்ச்சைகளை ஏற்படுத்திற்று.

இந்தப் பின்னணியில், வடக்கு, கிழக்கில் அகலக் காலூன்ற இந்தியா முயற்சிகளை எடுத்திருக்கின்றது. வடக்கில் இதற்கான பல வேலைத்திட்டங்கள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு விட்டன.

(சீனாவும் இதற்கான வாய்ப்புக்களைத் தேடுகின்றது) இப்போது இந்தியா கிழக்கில் சற்று கூடிய கவனம் செலுத்துவதாகத் தெரிகின்றது. இந்திய உயர்ஸ்தானிகள் சந்தோஸ் ஜாவின் கடந்த வார விஜயம் இந்த சந்தேகத்தை வலுப்படுத்துகின்றது.

மத்தள விமான நிலையமானது இந்தியா மற்றும் ரஷ்ய நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

"கொழும்பு-திருகோணமலை துறைமுகங்கள் இந்தியாவின் முதலீட்டுக்காகக் காத்திருப்பதாக" ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்திருக்கின்றார். இந்நிலையிலேயே இந்தியத் தூதுவரின் கிழக்கு மாகாணத்திற்கான விஜயம் இடம்பெற்றிருந்தமை கவனிக்கத்தக்கது.

கிழக்கிற்கு விஜயம் செய்த உயர்ஸ்தானிகர் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார்.

வழக்கமான விஜயங்களை விட சற்று மாறுபட்டதாக இது கருதப்படுகின்றது. குறிப்பாக, முஸ்லிம் தரப்புக்களை அரவணைக்கும் பாங்கிலான சந்திப்புக்களும் இம்முறை இடம்பெற்றிருந்தன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒலுவில் துறைமுகத்தையும் அதனை அண்டிய பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்ற கடலரிப்பையும் அவர் பார்வையிட்டுள்ளார். இது சாதக, பாதக தோற்றுவித்துள்ளது. குறிப்பாக முஸ்லிம் சிவில் சமூகம் இதனைக் கூர்ந்து நோக்குகின்றது.

உண்மையில் ஒலுவில் துறைமுகம் ஒரு தோல்வியுற்ற செயற்றிட்டமாக ஆகியிருக்கின்றது. ஆயிரக்கணக்கான ஏக்கர் மக்களின் நிலங்களைச் சுவீகரித்து பெரும் நிதிச் செலவில் கட்டப்பட்ட இத்துறைமுகம் ஒன்றுக்கும் உதவாத ஒரு செயற்றிட்டமாக மாறியிருப்பதும், கடலரிப்பு போன்ற எதிர்விளைவுகள் ஏற்பட்டிருப்பதும் சாதாரணமான விடயமல்ல.

எனவே, அவற்றை நிவர்த்தி செய்ய இந்தியா உளப்பூர்வமாக முன்வருமாக இருந்தால் அது வரவேற்கப்பட வேண்டிய விடயமே ஆகும். முஸ்லிம் நாடுகளோ ஏனைய சர்வதேச உதவி வழங்கும் தரப்புகளோ கண்டுகொள்ளாத ஒரு விடயத்தில் இந்தியா கரிசனை செலுத்தும் என்றால் அதனை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், இவ்வளவு காலமும் இவ்விடயத்தில் அறிக்கை மட்டும் விட்டுக் கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீமும், அரசியல்வாதிகளும் இந்திய உயர்ஸ்தானிகரை அழைத்து வந்திருப்பதும் இந்தியா, பிராந்திய ஆதிக்கத்தை அவாவி நிற்கின்ற காலப்பகுதியில் இது இடம்பெற்றிருப்பதும் இதன் உள்நோக்கங்கள் பற்றிய கேள்விகளை எழுப்புகின்றன.

இந்தியா பிராந்திய இராணுவ ஆதிக்கத்தில் பல சறுக்கல்களை அண்மைக் காலத்தில் எதிர்கொண்டுள்ளது.

மாலைதீவில் கடைசி சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில், இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் அகலக் காலூன்ற இந்தியா முனையும் என்று ஏற்கெனவே அனுமானிக்கப்பட்டிருந்தது.

கிழக்கில் எண்ணெய்க் குதங்களில் சிலவற்றை இந்திய நிறுவனம் தம்வசம் வைத்திருக்கின்றது. ஆயினும், துறைமுகமொன்று கட்டுப்பாட்டில் இல்லை, திருகோணமலை துறைமுகத்தில் பல நாடுகளும் கண்வைத்துள்ளதால், அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும் சாத்தியமில்லை.

இந்நிலையில், ஒலுவில் துறைமுகத்தில் அபிவிருத்தியை மேற்கொண்டால், ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அது தமது இராணுவ, ஆதிக்க அரசியலுக்கு உதவும் என்று இந்தியா நினைக்கின்றதா என்ற ஒரு நியாயமான கேள்வி இங்குப் பலமாக எழுகின்றது.

ஒலுவிலில் வைத்து, இந்திய உயர்ஸ்தானிகர் இந்த கருத்தை மறுத்துள்ள போதிலும், இதற்குப் பின்னால் உள்ள அரசியலையும் மறைமுக நோக்கத்தையும் குறிப்பாக முஸ்லிம்கள் சந்தேகத்துடன்தான் நோக்குகின்றனர். ஏனெனில் நமது அனுபவம் அப்பேர்ப்பட்டது.

ஒலுவில் துறைமுகம் என்றாலும் சரி, வேறு துறைமுகங்கள், விமான நிலையங்கள், வளங்கள் என்றாலும் சரி வெளிநாடு ஒன்று அதனை அபிவிருத்தி செய்ய முன்வருமாக இருந்தால், அது நல்ல விடயமே. ஆனால், அத்தோடு அவர்கள் 'பெட்டியைக் கட்ட' வேண்டும்.

அதைவிடுத்து, தங்களுடைய பிராந்திய ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக அல்லது வேறு நோக்கங்களை மனதில் வைத்துக் கொண்டு முன்வருகின்ற நாடுகளுக்கு நமது வளங்களையும், சொத்துக்களையும், தேசியப் பாதுகாப்பையும் தாரைவார்க்க வேண்டிய தேவை இலங்கையருக்கு கிடையாது.

# தார்மீகனுடன் ஒரு நேர்காணல்...



நதாஷா ஸ்டீபன்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழம்

நேற்றைய தொடர்ச்சி...

*கேள்வி : இதுவரை நீங்கள் பாடிய பாடல்களில் உங்களுக்கு மிகப் பிடித்த பாடல் எது? ஏன் அப்பாடல் உங்களுக்கு பிடித்திருக்கிறது?*

பதில் : கூடுதலாக நான் பாடிய பாடல்கள், பாடும் பாடல்கள் அனைத்துமே எனக்கு பிடிக்கும். என்னுடைய பாடல்களை யார் விரும்பாவிடினும் நான் அவற்றை விரும்புகின்றேன். திரும்பத் திரும்ப மற்றும் தனியாக இருக்கும் நேரங்களில் எல்லாம் என்னுடைய பாடல்களை நான் அதிகமாக கேட்பதுண்டு.

இவ்வாறு நான் பாடிய பாடல்களை நானே கேட்கும் போது, அது அதிக மகிழ்ச்சியை வழங்கும். குறிப்பாக ஜொனாவின் இசையில் 2020ஆம் ஆண்டு தீபாவளி அன்று வெளியான "குட்டித்தீபம்" பாடல் மிகவும் பிடித்த பாடல். அந்தப் பாடல், அந்த இசை மற்றும் அந்த வரிகள் என அத்தனையுமே வித்தியாசமான உணர்வை வழங்குவதால் அப்பாடல் எனக்கு மிகவும் பிடித்த பாடலாக இருக்கின்றது.

*கேள்வி : உங்கள் பார்வையாளர்களுடன் நீங்கள் எவ்வாறு தொடர்பை ஏற்படுத்து;கின்றீர்கள்?*

பதில்: இன்று சமூக வலைத்தளங்கள் தான் அதிக பார்வையாளர்களை எனக்கு பெற்று தருகின்றது. எனவே, சமூக வலைத்தளங்கள் மூலம் நான் வெளியிடும் பாடல்களை பார்த்து தான் பார்வையாளர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.


அந்தக் கருத்து எதிர்மறையாக இருந்தாலும், அல்லது நேர்மறையாக இருந்தாலும் அதை நான் முழு மனதோடு ஏற்றுக் கொள்வேன்.

இவ்வாறு பார்வையாளர்களாக இருந்த பலரில் ஒரு சிலர் என்னுடன் சேர்ந்து பல தயாரிப்புகளையும் மேற்கொண்டிருக்கின்றனர். அந்த வகையில், சமூக வலைத்தளங்கள் என்பது பார்வையாளர்களை தொடர்பில் வைத்திருப்பதற்கான ஒரு சிறந்த வழியாக அமைகின்றது

*கேள்வி: வளர்ந்து வரும் கலைஞர்களுக்காக நீங்கள் கூற விரும்புவது என்ன?*

பதில் : நாங்கள் வாய்ப்புக்களை தேடாமல் வாய்ப்புகளை உருவாக்குபவர்களாக இருக்க வேண்டும்.

வேறு ஒரு நபர் வாய்ப்புகளை தரும் வரை காத்திருப்பது என்றால் கனவு நனவாகிவிடும். எனவே, வாய்ப்புகளுக்காக காத்திருக்காமல் உங்கள் திறமைகளை கொண்டுவர நீங்களே வாய்ப்புக்களை உருவாக்குங்கள்.







# கதை முக்கியம்

ஒய் என்ற தமிழ் படத்தில் நடித்த ஈஷா ரெப்பா, தற்போது தெலுங்கில் அதிகம் நடிகத்து வருகின்றார். அத்துடன், மலையாளத்தில் வெற்றி பெற்ற 'ஜெய ஜெய ஜெய ஜெய ஹே' படத்தின் தெலுங்கு ரீ–மேக்கில் நடித்து வருகிறார்.

சினிமா தவிர்த்து சமூக வலைத்தளங்களில் புகைப்படங்களை வெளியிட்டு ரசிகர்களை கவர்ந்து வருகிறார்.

இவர் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது : "நல்ல இயக்குநர்கள் நல்ல படங்களையே இயக்குவார்கள். இந்த கதை பிடித்திருந்தது. நான் எப்போதும் படத்தின் கதையை நம்பி தான் அதில் நடிக்கலாமா, வேண்டாமா என முடிவு செய்வேன். பணத்தை வைத்து அல்ல" என்றார்.

# மீண்டும் இணைந்த ஜோடி



ரியோ ராஜ் நடிப்பில் அண்மையில் வெளியான 'ஜோ' படத்தில் அவருக்கு ஜோடியாக மாளவிகா மனோஜ் நடித்திருந்தார்.

இந்த நிலையில், இந்த ஜோடி மீண்டும் அடுத்த படத்தில் இணைந்துள்ளது. ட்ரம்ஸ்டிக்ஸ் புரொடக்சன்ஸ் நிறுவனம் சார்பாக, மணிகண்டன் கந்தசுவாமி தயாரிக்கிறர். புதுமுக இயக்குநர் கலையரசன் தங்கவேல் இயக்குகிறார்.

மாதேஷ் மாணிக்கம் ஒளிப்பதிவு செய்ய, சித்துகுமார் இசை அமைக்கிறார். ஆர்.ஜே.விக்னேஷ், ஷீலா ராஜ்குமார், டைரக்டர் ஏ.வெங்கடேஷ், கஜராஜன், ஜென்சன் திவாகர் உள்பட பலர் நடிக்கிறார்கள்.

படம் பற்றி இயக்குநர் கலையரசன் கூறும்போது, "திருமணமான ஆண்களின் பிரச்னைகளை பெண்களும் ஏற்றுக்கொள்ளும்படியாக சொல்லப்போகும் முதல் திரைப்படமாக நிச்சயம் இந்தப்படம் இருக்கும்" என்றார்.

# மீண்டும் தள்ளிப்போகும் 'இந்தியன் 2'



கடந்த 1996ஆம் ஆண்டில் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்து வெளிவந்த 'இந்தியன்' திரைப்படம் சிறந்த வரவேற்பை பெற்றது. இதனையடுத்து, ஷங்கர், கமல்ஹாசன் கூட்டணியில் 'இந்தியன் 2' படம் உருவாகி வருகிறது.

அனிருத் இசையமைக்கும் இதன் படப்பிடிப்பு நிறைவு பெற்று கடந்த சில மாதங்களாக போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகளில் ஏற்படும் தாமதம் உள்ளிட்ட காரணங்களால் இப்படம் ஏற்கெனவே ஜூன் மாத 13ஆம் திகதி வெளியாகும் என அறிவித்ததில் இருந்து சற்று தள்ளி ஜூலை மாதத்தில் தான் திரைக்கு வரும் என சினிமா வட்டாரத்தில் தெரிவிக்கின்றனர்.

மேலும், இந்த திகதியில் ஏற்கெனவே தனுஷ் இயக்கி நடித்துள்ள 'ராயன்' படத்தை வெளியிட திட்டமிட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது 'இந்தியன் 2' தள்ளிப்போவதால் 'ராயன்' இந்த திகதியில் உறுதியாக வெளியாகும் என்கிறார்கள்.



# விஜய் கோவிலில் த்ரிஷா வழிபாடு?

தமிழ் திரையுலகில் கடந்த 25 ஆண்டுகளாக நாயகியாக நடித்து வரும் த்ரிஷா, 'விடாமுயற்சி' படத்தில் அஜித்துடன் நடித்து வருகிறார்.

அண்மையில் த்ரிஷா தனது பிறந்த நாளை கொண்டாடிய நிலையில், அவருக்கு ரசிகர்கள் மற்றும் திரையுலகினர் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், தனக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் கூறிய அனைவருக்கும் த்ரிஷா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நன்றி தெரிவித்துள்ளதுடன், அதில் சில புகைப்படங்களையும் பதிவு செய்துள்ளார்.

அந்த புகைப்படத்தில் ஒன்று சாய்பாபா புகைப்படமாக இருக்கும் நிலையில், இது விஜய் கட்டிய சாய்பாபா கோவிலா? என்று ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர் இதற்கு த்ரிஷா பதில் அளிப்பாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.




# சிம்புவின் தேடல்



கடந்த ஆண்டில் தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் நடிகர் சிம்பு தனது 48ஆவது படத்தில் நடிப்பதாக அறிவிப்புகள் வெளியானது. இந்தப் படம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருவதால் சிம்பு தற்போது மணிரத்னம் இயக்கத்தில் உருவாகி வரும் 'தக் லைப்' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

இந்நிலையில், தனது அடுத்த படங்களுக்காக கதை கேட்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறார் சிம்பு.

இப்போது கடந்த சில மாதங்களுக்கு முன்பு வெளிவந்த 'டைனோசர்ஸ்' என்கிற பட இயக்குநர் எம்.ஆர்.மாதவன் என்பவரை அழைத்து முதற்கட்டமாக தனது அடுத்த படத்திற்காக புதிய கதையை கேட்டுள்ளார் என நெருங்கிய வட்டாரத்தில் இருந்து தகவல் வெளியாகி உள்ளது.



# அல் ஜசீராவுக்கு தடை

## இஸ்ரேல் அதிரடி



காசா முனையை நிர்வகித்துவரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 240 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. அதில், 100க்கும் மேற்பட்டோரை மீட்டுள்ள இஸ்ரேல், மீதமுள்ள பணய கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. இதேவேளை, ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது போர் அறிவித்து காசா முனை மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரில் 34 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 450க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் ஆயுதக் குழுவினர் இடையே போரில் ஹமாஸுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. மேலும், சிரியா, லெபனானின் செயல்பட்டு வரும் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஈரான் ஆயுத உதவி வழங்கி வருகிறது. அதேபோல், ஏமனில் செயல்பட்டுவரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குழுவினரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கு ஆதரவு அளித்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா, எகிப்து, கத்தார் உள்ளிட்ட நாடுகள் முயற்சித்து வருகின்றன.

இந்நிலையில், இஸ்ரேலில் செயல்பட்டுவரும் அல் ஜெசீரா செய்தி நிறுவனத்திற்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது. கத்தார் அரசின் நிதியில் செயல்பட்டுவரும் அல் ஜெசீரா செய்தி நிறுவனம் உலகின் பல்வேறு நாடுகளில் அலுவலகம் அமைத்து செய்தி ஒளிபரப்பி வருகிறது. இஸ்ரேலிலும் அல் ஜெசீரா செய்தி நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

தற்போது அச்செய்தி நிறுவனத்தை மூட இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.


ரஷ்யா

### மீண்டும் ரஷ்ய ஜனாதிபதியாக பதவியேற்கும் புட்டின்

மற்றொரு 6 ஆண்டு பதவி காலத்தை ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் இன்று முதல் தொடங்குகிறார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 88 சதவீத வாக்குகள் பெற்று 5ஆவது முறையாக விளாடிமிர் புட்டின் ரஷ்ய ஜனாதிபதியாகியுள்ளார். இதன் மூலம் ரஷ்ய வரலாற்றில் அதிக முறை ஜனாதிபதியாக இருந்தவர் என்கிற சாதனையை படைத்துள்ளார்.


1999ஆம் ஆண்டில் கடைசி நாளில் செயல் ஜனாதிபதியாக பதவியேற்ற புட்டின், 2000ஆம் ஆண்டு மே 7ஆம் திகதி, முதன்முறையாக ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.



2008 வரை பதவியில் இருந்த அவர், 2012 மே மாதம் முதல் இன்று வரை ஒற்றை ஜனாதிபதியாக நீடிப்பது குறிப்பிடத் தக்கது.

அவுஸ்திரேலியா

### பெண் அரசியல்வாதி பாலியல் வன்புணர்வு



கடந்த வார இறுதியில் இரவு நேரத்தில் பொழுதுபோக்க தன்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதியான மத்திய குயின்ஸ்லாந்தின் யெப்பூனில் வெளியே சென்றபோது, சிலர் தன்னை கடுமையாக தாக்கியதோடு, மயக்க மருந்து கொடுத்து பாலியல் வன்புணர்வு செய்ததாக, அவுஸ்திரேலிய பெண் அரசியல்வாதியான, பிரிட்டானி லாகா குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபற்றி பிரிட்டானி கூறுகையில், "இந்த சம்பவம் யாருக்கு வேண்டுமென்றாலும் நடக்கலாம். எங்களில் பலருக்கு இதுபோன்ற சோகம் நடந்துள்ளது. என்னுடைய உடலில் போதைப்பொருள் கலந்திருந்தது என்பது மருத்துவ பரிசோதனை முடிவில் உறுதியானது. இதனால் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டேன். என்னை தொடர்பு கொண்டு பேசிய பிற பெண்களுக்கும் கூட மயக்க மருந்து செலுத்தப்பட்டு இருக்கலாம் என தெரிகிறது.

நம்முடைய நகரில் மயக்க மருந்து கொடுப்பது அல்லது பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுவது போன்ற ஆபத்து இல்லாமல், நாம் மகிழ்ச்சியாக சமூகம் சார்ந்த செயல்களில் ஈடுபட முடிய வேண்டும்" என அவர் தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக, அவுஸ்திரேலியாவில் பாலின அடிப்படையிலான வன்முறைகள் அதிக அளவில் நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருப்பூர்

### இந்தியளவில் சாதனை படைத்த விவசாயி மகன்

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், அகில இந்திய குடிமைப் பணிகளில் சேர நடத்தப்படும் யு.பி.எஸ்.சி. இறுதித் பரீட்சையில் இந்திய அளவில் சாதனை படைத்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம் உடுமலை தாலுகா பள்ளபாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ராமு - பானுமதி தம்பதியின் 24 வயதான மகன் முகிலன், சென்னையில் உள்ள எம்.ஐ.டியில் ஒட்டோ மொபைல் இன்ஜினியரிங் பட்டப்படிப்பை கடந்த 2021இல் முடித்துள்ளார்.

பின் சிவில் சர்வீஸ் பரீட்சைக்கு தன்னை தயார் படுத்தி வந்த அவர், தினமும் 10 மணி நேரம் வரை படித்து வந்துள்ளார். எனினும், கடந்தாண்டு நடைபெற்ற பரீட்சையில் பங்கேற்று தோல்வியடைந்துள்ளார்.



இந்நிலையில், தனது பாட்டி பல ஆண்டுகளாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையிலும், விவசாய தொழிலை மேற்கொண்டு வருவதை கண்ட முகிலன், அவரை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு தன்னாலும் சாதிக்க முடியும் என்ற உத்வேகத்துடன், கடந்த முறை செய்த தவறுகளை சரிசெய்து, தீவிர பயிற்சி மேற்கொண்டு இந்த ஆண்டு நடைபெற்ற சிவில் சர்வீஸ் பரீட்சையில் வெற்றி பெற்றுள்ளார்.

அகில இந்திய அளவில் 404ஆவது இடத்தை பெற்றுள்ள அவர், கடின முயற்சியுடன் பயிற்சி மேற்கொண்டால், குடும்ப பின்னணி ஒரு தடையாக இருக்காது என தெரிவித்துள்ளார்.

மதுரை

### மதுபோதையில் தகராறு செய்த மகனை அடித்துக் கொன்ற தாய்



உசிலம்பட்டி அருகே மதுபோதைக்கு அடிமையாகி அடிக்கடி தாயுடன் தகராறில் ஈடுபட்டு வந்த மகனை, தாய் அடித்துக் கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே தும்மக்குண்டு கிராமத்தைச் சேர்ந்த சேகர் - பாண்டியம்மாள் ஆகியோரின் மகன் சிவசாமி. திருமணமாகி விவாகரத்தான இவர், தனது தாய் தந்தையுடன் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், மது போதைக்கு அடிமையான இவர், நாள்தோறும் மது போதையில் தனது தாயுடன் தகராறில் ஈடுபட்டு வருவதை வாடிக்கையாக வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

அப்படி நேற்று முன்தினமும் வழக்கம் போல மது போதையில் வீட்டிற்கு வந்த சிவசாமி, தாயுடன் தகராறில் ஈடுபட்டதோடு வீட்டில் இருந்த பொருட்களை சேதப்படுத்தி, தாயை தாக்க முற்பட்டுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த தாய் பாண்டியம்மாள், மகன் சிவசாமியை கட்டை மற்றும் கல்லால் தாக்கியுள்ளார். இதில் படுகாயமடைந்த சிவசாமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து விரைந்து வந்த சிந்துபட்டி காவல்நிலைய பொலிஸார், உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து பாண்டியம்மாளை கைது செய்த பொலிஸார், தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.பி.எல்: லக்னோவை தோற்கடித்த கொல்கத்தா



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), லக்னோவில் ஞாயிற்றுக்கிழமை (04) இரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் உடனான போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற லக்னோவின் அணித்தலைவர் லோகேஷ் ராகுல், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, சுனில் நரைனின் 81 (39), பில் ஸோல்டின் 32 (14), அங்க்றிஷ் ரகுவன்ஷியின் 32 (26), ரமன்டீப் சிங்கின் ஆட்டமிழக்காத 25 (06), அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயரின் 23 (15) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 236 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய லக்னோ, மிற்செல் ஸ்டார்க், ஹர்ஷித் ரானா (3), வருண் சக்கரவர்த்தி (3), அன்ட்ரே ரஸல் (2), சுனில் நரைனிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 16.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 137 ஓட்டங்களையே பெற்று 98 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக நரைன் தெரிவானார்.

இதேவேளை, தரம்சாலாவில் நடைபெற்ற மற்றைய போட்டியில் பஞ்சாப் கிங்ஸை சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றது.

இந்நிலையில், டெல்லியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை டெல்லி கப்பிட்டல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## காயத்திலிருந்து குணமடைய இலங்கை திரும்பிய பத்திரண



பின் தொடை தசைநார் காயமொன்றிலிருந்து குணமடைவதற்காக இலங்கைக்கு இந்தியன் பிறீமியர் லீக்கின் சென்னை சுப்பர் கிங்ஸின் வேகப்பந்துவீச்சாளர் மதீஷ பத்திரண திரும்பியுள்ளார்.

இவ்வாண்டுத் தொடரின் முதலாவது போட்டியையும் பங்களாதேஷுக்கெதிரான போட்டியில் காயமடைந்ததன் காரணமாகத் தவறவிட்ட பத்திரண, ஆறு போட்டிகளில் 13 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

தீபக் சஹறும் காயமடைந்துள்ள நிலையில் வேகப்பந்துவீச்சு, இறுதி ஓவர்களில் பந்துவீசுவதில் பற்றாக்குறையை இலங்கை எதிர்நோக்குகிறது.

### நுவரெலியா கால்பந்தாட்ட சங்கத்தின் ஏ பிரிவு தொடர்:

## சம்பியனானது றேஞ்ச் ஈகிள்

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா கால்பந்தாட்ட சங்கத்தின் கடந்த ஆண்டுக்கான ஏ பிரிவு கால்பந்தாட்டத் தொடரில் றேஞ்ச் ஈகிள் சம்பியனானது.



அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் யங் பேட்ஸை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே றேஞ்ச் ஈகிள் சம்பியனானது. றேஞ்ச் ஈகிள் சார்பாகப் பெறப்பட்ட கோலை சந்தோஷ் பெற்றிருந்தார்.

பி பிரிவுத் தொடரில் யங் யுனைடெட்டை வென்று பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

சி பிரிவுத் தொடரில் சண் பேட்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்று பம்பரகலை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.






### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## டொட்டென்ஹாமை வென்ற லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக மொஹமட் சாலா, அன்றூ றொபெர்ட்சன், கோடி கக்போ, ஹார்வி எலியட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

டொட்டென்ஹாம் சார்பாக றிஷலிஷன், சண் ஹெயுங்-மின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 83 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 82 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், 78 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் லிவர்பூலும், 67 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அஸ்டன் வில்லாவும் காணப்படுகின்றன.

இதில் சிற்றி ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கான அழைப்பு

■ எம்.யூ.எம்.சனூன்

பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களின் விபரங்களை சேகரிக்கும் நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் பணிப்புரையின் பேரில் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள செயற்திறனுடைய பதிவு செய்யப்பட்ட அனைத்து விளையாட்டு கழகங்களும் தமது விபரங்களை பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் முஹம்மது நௌபலின் 077-7723521 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விளையாட்டுக் கழகத்தின் பெயர், முகவரி, தலைவர், செயலாளரின் தொலைபேசி இலக்கங்கள், கழகத்தினால் விளையாடப்படும் பிரதான விளையாட்டுகள், விளையாட்டுக் கழகத்தில் உள்ள மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை, பதிவிலக்கம் போன்ற விபரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை 07, மே 2024, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.